சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 07.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **100/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-17 |
| சாட்சியின் பெயர் | : | அன்பழகன் |
| தந்தை பெயர் | : | தங்கவேலு |
| கிராமம் | : | ஆரியலூர் |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | மாவட்ட ஆட்சியர்,<br>நேர்முக உதவியாளர்<br>(சட்டம்), மயிலாடுதுறை<br>மாவட்டம். |
| வயது | : | 56 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 7, 9, 10 எதிரிகள் ஆஜர். 8 ம் எதிரி வேறு வழக்கில் நீதிமன்றக் காவலில் இருந்து வருகிறார். அவர் பி.டி. வாரண்ட் மூலம்

ஆஜரப்படுத்தப்பட்டுள்ளார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மயிலாடுதுறை மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ( சட்டம் ) ஆக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர் வட்டாட்சியராக பணிபுரிந்தபோது, திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின்படி, அ.சா.1 ஜான்சன், அவரது சகோதரர் குமரேசன் மற்றும்அ.சா.3 சுசீலா ஆகியோர் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவர்கள் என ஜாதி சான்றிதழ்கள் வழங்கினேன். அந்த சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ.7 முதல் அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை-

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M Digitally signed by VADIVEL M Date: 2026.02.07 18:04:29 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.